10. 03. 2025.

கூடுதல் அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் விழுப்புரம் )

அமர்வு வழக்கு எண். 205/2018

அ.சா.28

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜேந்திரன் | | |
| த/பெ | ரகுநாதன் | | |
| கிராமம் | கோட்டுசேரி | தொழில் | |
| தாலுக்கா | காரைக்கால் | வயது | 64/2025 |
| மாநிலம் | (புதுவை மாநிலம்) | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் ரயில்வே பாதுகாப்பு படையில் துணை உதவி ஆய்வாளராக பணி செய்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2014 ம்ஆண்டு நான் விழுப்புரம் இரயில்வே பாதுகாப்பு படை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி யிலிருந்து வந்தேன். அப்போது என் பணியானது இரயில்வே பொருட்கள், நடைமேடை பாதுகாப்பு , இரயிலில் வரும் பார்சல்களை கண்காணிப்பது, பயணிகள் பாதுகாப்பு ஆகியவை எனது பணியாகும். கடந்த 07/05/2014 ந் தேதி காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை விழுப்புரம் இரயில் நிலைய நடைமேடை பாதுகாப்பு பணியிலிருந்தேன். எனக்கு இரயில் நிலையத்தின் கிழக்கு பகுதியிலிருந்து மேற்கு பகுதி வரை என் பாதுகாப்பு எல்லையாகும். அன்று விழுப்புரம் இரயில் நிலையத்தில் ஒருவர் இறந்துவிட்ட வழக்கு சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள். என் பணி நேரத்தில் அவ்வாறு எதுவும் நடந்ததாக எனக்கு தெரியவில்லை என்று தெரிவித்தேன். வேறு

எதாவது என்னை வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலீசார் விசாரணையில் நான் விழுப்புரம் இரயில் நிலையத்தில் தங்கியிருந்து ஓடும் இரயிலில் புத்தகங்கள் விற்று வரும் ஜெயவேல் என்பவர் தூத்துக்குடியை சேர்ந்த ஒருவரது பர்சை திருடி எடுத்துக்கொண்டான் என்றும், அதனை தொடர்ந்து அவன் பிடிபட்டு விழுப்புரம் இரயில்வே நிலையத்தில் 06/05/2014 ந் தேதி விசாரணைக்கு அழைத்து செல்லப்பட்டவன் 07/05/2014 ந் தேதி காவல் நிலைய விசாரணையில் இறந்துவிட்டான் என்று தெரிந்துக்கொண்டேன் என்றும் சொன்னேன் என்றால் சரியல்ல. மேலும் 07/05/2014 ந் தேதி நான் பணியிலிருந்த போது யாருடைய பர்சும் களவாடப்பட்டதாகவோ, பொதுமக்கள் விரட்டி பிடித்து எதிரியை காவல் நிலையத்தில் ஒப்படைத்ததாகவோ நான் அறிந்துக்கொள்ளவில்லை என்று காவல் துறையில் விசாரணையில் கூறிவிட்டு தற்போது சங்கதிகளை மறைத்து எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

**மறுவிசாரணை**

**இல்லை**